Registered as a Newspaper in Sri Lanka   சுக்கிகள்: [06]   விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம்: 02   ஏப்ரல்   (09 - 04 - 1991)   செவ்வாய்க்கிழமை   ஓசை: 50

## சுகாதார திணைக்கள 200 ஊழியர் ஓய்வில்

(யாழ்ப்பாணம்)
யாழ். சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த இருநூறு பேர் வரையிலான ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்கின்றனர். இவர்கள் அனைவரும் 44/90 என்ற சுற்றுநிருபத்தின் அடிப்படையில் சுய விருப்பத்தின்பேரில் ஓய்வு பெற்றுக்கொண்டுள்ளனர். இவ்வாறு ஓய்வு பெற்றுக்கொண்டவர்களில் மூன்று வைத்திய (6ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு உயர் அதிகாரியும் இரு இராணுவத்தினரும் பலி

காரைநகரில் ஒரு இராணுவ உயர் அதிகாரி கொல்லப்பட்டதாக நேற்றுக் கொழும்பில் இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன. காரைநகரில் கடற்படைத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் இந்த உயர் அதிகாரி கொல்லப்பட்டதாக இராணுவ தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

காரைநகரில் இராணுவ தளத்திற்கு வெளியே மறைந்திருந்த புலிகள் மீது தாக்குதலை அரச படைகள் நடத்தியதாகவும், புலிகள் தரப்பில் இழப்புப்பற்றிய விபரங்கள் தெரியாதென்றும் தெரிவிக்கப்பட்டது. (6 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை தொடர்பாக இணக்கம்

(லண்டன்)
சிறிலங்காபாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும், கல்வித் திணைக்கள அதிகாரிகளும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை நடாத்துவது தொடர்பாக நேற்று கொழும்பில் நடத்தியபேச்சு வார்த்தையில் இணக்கத்திற்கு வந்ததாக நேற்றிரவு பி.பி.ஸி. அறிவித்தது.

இதன் பிரகாரம் பரீட்சை நடைபெறும் கட்டடங்களுக்கு இடையில் சிறிலங்கா ஆயுதப் படையினரின் தாக்குதல் தவிர்க்கப்படும் என்றும் அதே வேளை தம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆயுதப்படையினர் எடுப்பார்கள் எனவும் இராணுவத்தரப்பில் நிபந்தனை விதிக்கப்பட்டது.

மேலும் இப்பரீட்சை ஏப்ரல் 23 ஆம் திகதிக்கும் மே 14ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறும் என்றும், இப்பரீட்சைக்குரிய வினாத்தாள்களை செஞ்சிலுவைச் சங்கமும், சிறுவர் பாதுகாப்பு நிதியம் என்பன புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுள் எடுத்துச் செல்லவும் இணக்கம் காணப்பட்டதாகவும் மேலும் அந்த (6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு மாவட்டத்தில்
# புலிகள் - இராணுவம் பல முனையில் மோதல்

(நமது நிருபர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றும், நேற்றுமுன்தினமும் விடுதலைப்புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் பலமுனைகளில் மோதல்கள் ஏற்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதல்கள் மகிழவெட்டுவான், புலிபாய்ந்தகல், குறிஞ்சாமுனை, புலுட்டை மாவோடை, வாகனேரி ஆகிய பகுதிகளில் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புலிபாய்ந்த கல்லில்

நேற்று முன்தினம் காலை ஆறுமணியளவில் புலிபாய்ந்தகல் முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர்மீது முகாமில் இருந்து ஒன்றரை மைல் தூரத்திலிருந்து விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதல் காலை 6-15க்கு ஆரம்பமாகி மாலை 3-30 மணிவரை நீடித்தது. இந்தத் தாக்குதலால் பலத்த சேதத்திற்குள்ளான இராணுவத்தினர் புலி பாய்ந்த கல் முகாமில் இருந்து அரைமைல் தொலைவிலுள்ள காட்டுக்கு ஓடித் தப்பிவிட்டனர். பின் நேற்று அதிகாலை 3-30மணிக்கு மீண்டும் புலிபாய்ந்த கல் முகாமிற்குச் சென்றுள்ளனர்.

### புலுட்டை மானோடையில்

நேற்றுமுன்தினம் காலை 7மணியளவில் புல்லுமலை இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் காட்டுப்பகுதிக் கூடாகச் சென்று புலுட்டை மானோடை என்ற இடத்தை வந்தடைந்தபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இத்தாக்குதல் காலை 7 30 மணியில் இருந்து காலை 9.15 மணிவரை நீடித்தது. இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. சேதஎண்ணிக்கை விபரம் (6 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் நேற்றும் தொடர்ந்து குண்டுவீச்சு

(காரைநகர்)
சிறிலங்கா விமானப்படையினர் காரைநகர் கடற்படைத் தளத்தை அண்டிய பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 9.00 மணி முதல் 11 30 மணிவரையும் விமானப் படையினரின் "அவ்ரோ" விமானம் ஒன்று பீப்பாக்குண்டுகளை வீசியது. இக்குண்டுவீச்சுத் தாக்குதலில் இக்கரை. பலகாடு ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடுகள் சில தீப்பிடித்து எரிந்தன. (6 ஆம் பக்கம் பார்க்க)

## மீன்பிடிக்கச் சென்றவர் மீது கடற்படை கடும் தாக்கு

(செ: த. மை)
கட்டுமரத்தில் மீன்பிடித்துக்கொண்டு நின்ற குடும்பஸ்தர் ஒருவர். கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு, மயக்கமடைந்த நிலையில் கடலுக்குள் வீசப்பட்டார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நந்தகுமார் (23 வயது) என்பவருக்கே இக்கதி நேர்ந்தது.

கடந்த 3 ஆம் திகதி கற்கோவளம் கடல் பகுதியில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு கூட்டுறவு முகாமையாளர் முகாமிற்கு அழைக்கப்பட்டு இராணுவத்தால் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)
திருக்கோணமலை மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள் நால்வர் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது; கடந்தமாதம் 26 ஆம் திகதி திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள நிலாப்பளை இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் கமைச்சத்திற்கு மறு அப்பகுதியில் கடமையாற்றும் நான்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளனர். இவ்வுத்தரவின்படி இராணுவத்தினரைச் சந்திக்கச்சென்ற இராமச்சந்திரன் (கங்குவேலி), நவரத்ணம் (கங்குவேலி), குமார் (சூளியடிச்சேனை), மாணிக்கராசா (பள்ளிக்குடியிருப்பு) ஆகிய நான்கு முகாமையாளர்களையும் மூதூர் ஜி. பி. எஸ். இராணுவமுகாமில வைத்துச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

## வீரவணக்கம்

### 'இருபா', 'கேசவன்'

(யாழ்ப்பாணம்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வவுணதீவு முனையைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் இருபா (செல்லத்தம்பி அரிச்சந்திரன், புதூர், மட்டக்களப்பு, கேசவன் (மூர்த்தி, புதூர், மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## பம்பைமடு மோதலில் வீரமரணமடைந்தோர்

(வவுனியா)
வவுனியா மாவட்டத்திலுள்ள பம்பைமடுவில் இராணுவத்தினருடன் கடந்த வியாழக்கிழமை ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலமாக விடுதலைப் புலிகளிடம் கடந்த சனிக்கிழமை ஒப்படைக்கப்பட்ட செய்திஎமதுபத்திரிகை (6 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பு ஏது? தடயம் ஏது?

(கொழும்பு)
புலிகள் செய்த கொலைக்கு துப்பு ஏது? தடையம் ஏது? இவ்வாறு ரஞ்சன் விஜரட்ண கொலைதொடர்பான விசாரணை முன்னேற்றம் பற்றிக் கொழும்புச் செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த பொலிஸ் உயர் அதிகாரி. கொலை பற்றிய கதைக்கே முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

## எமது தலைவர் யார்?

(செ. த. மை.)
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒருமுன்னோடிப் பாடசாலையில் இம்முறை தவணைப் பரீட்சையின் போது 8ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சமூகக்கல்வி வினாக்கொத்தில் "எமது நாட்டின் தலைவரின் பெயர் என்ன?" என்று ஒரு கேள்வியும் இடம்பெற்றது.

இதற்கு பல மாணவர்கள் எமது நாட்டின் தலைவர் (6ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டுவீச்சால் வவுனியாவில் வீடுகள் சேதம்

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் பொதுமக்களின் நான்கு வீடுகள் முற்றாகச்சேதமடைந்துள்ளன.

நேற்றுக்காலை 7 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் விமானத் தாக்குதலை மேற்கொண்டன. இத்தாக்குதலில் செல்வரத்தினம், செல்வம் ஆகியோரின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. (6ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர்களுடன் பேச செஞ்சிலுவையில் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)
புதிதாக பதவிக்கு வந்த யாழ். செஞ்சிலுவைச்சங்க நிர்வாகப் பகுதி தமது அலுவலகத்திற்கு வரும் பத்திரிகையாளர்களை இட்டு எச்சரிக்கை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அலுவலகத்திற்கு வரும் பத்திரிகையாளர்களுடன் நாம் மட்டுமே பேசத் தகுதி உடையவர்களாவர். வேறு எவரும் அவர்களுடன் எந்த விடயம்குறித்தும் பேசக் (6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### சனிநீராடு

வாரம் ஒரு நாள் தலைக்கு எண்ணெய் தேய்த்து மிக்க வைற் ஒவிவ் ஸ்நானப் பவுடர் பாவித்துத் தலை முழுகிச் சுகவாழ்வு காணுங்கள். எங்கும் விற்பனையாகிறது மிக்கமைற். (B-2321)

### பழைய புத்தக விற்பனை நிலையம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள் பேப்பர் போத்தல் செம்பு பித்தளை கோழித்தீன சீமெந்து உறைகள் உரப்பைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட் (இலங்கை வங்கி முன்னே) யாழ்ப்பாணம்.

(B-2301)

### தவறிவிட்டது

கந்தசாமி மாரிமுத்து என்பவருடைய அடையாள அட்டை இல. 676332232V நெடியகாட்டுக்கும் ஆதி கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சூ தர்மகுலசிங்கம் C/o மாரிமுத்து மீனாட்சி அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(B/2342)

### தேவை

பாவித்த சம்போ, ஓடிக்கலோன், Gum (கம்) Vicks போத்தல், பவுடர் டப்பா, போல்பொயின்ட் பேனா. சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை வாங்கப்படும். எஸ். சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்பு ஸ்ரூடியோ பின்புறம் யாழ்ப்பாணம். (B-2169)

## இளைஞர் தற்கொலை

(புங்குடுதீவு)

வாழ்க்கையில் விரக்தியுற்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. புங்குடுதீவு கிழக்கு வல்லன் பகுதியைச் சேர்ந்த இரவிச்சந்திரன் (வயது 23) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர் ஆவார்.

ஒரு பெண் குழந்தையின் தந்தையான இவர் குடும்பத் தகராறு காரணமாக விரக்தியடைந்து நஞ்சில் தஞ்சம் புகுந்தார் என தெரிவிக்கப்படுகிறது. (22)

## வடமராட்சி கோட்ட பாடசாலைகளுக்கான சேதம் 30 லட்சம் ரூபா என மதிப்பீடு

(செ.த.மை)

வடமராட்சி கோட்டக் கல்விப்பிரிவில் 90 ஜூன் 11ஆம் திகதிக்குப் பின்னர் போர் விமானங்கள், கடற்படைத் தாக்குதல்களினால் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதம் சுமார் 30இலட்சம் ரூபா எனமதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுள் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக் கட்டடங்கள், தளபாடங்களின் சேதம் 10லட்சத்து 70ஆயிரத்து 800 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடசாலை கடந்த 90ஆம் ஆண்டு அக்டோபர் 10லும், நவம்பர் 19லும் அதற்கு முன்னருமாக மூன்று தடவைகள் போர் விமானங்களின் குண்டுவீச்சுக்கு இலக்காகியிருந்தது.

வடமராட்சிக் கோட்டத்தில் 8 கொத்தணிப் பிரிவுகள். இதில் 83 பாடசாலைகள். இவற்றில் 11 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன என்றும், வல்வெட்டித்துறைக் கொத்தணியில் மட்டும் 7 பாடசாலைகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் "அருண்"

ஏரம்பு — சின்னம்மா தம்பதியரின் புதல்வன்

**பாலச்சந்திரன்**

(சந்துரு)

புங்குடுதீவு.

தோற்றம்: 18-10-1960

வீரனாய் மறைவு: 09-04-1988

அருணோதயத்திலுதித்த அருணே! தமிழீழத் தளை அறுக்க, வீரவேங்கையாய் எழுந்து வீரம்பல விளைத்து நின்ற வீரனே! வேடதாரிகளாம் இந்திய அரக்கரின் சுற்றி வளைப்பின்போது, இயக்க மரபையொட்டி நீயும், உனது நண்பர் பிரசன்னாவும் முறையே, நஞ்சருந்தியும் குண்டை வெடிக்கவைத்தும் புகழுடம்பெற்றுத் தமிழீழத்தின் விடிவெள்ளியானீர்கள்!

இன்றும் உங்கள் எண்ணம் ஈடேறத் தலைவரும், விடுதலைப் புலிப்படைச் சுதந்திர வீரர்களும், வீராங்கனைகளும் முனைப்புடன் செயற்படுகின்றனர். தமிழீழம் மலரக் காலம் மிகநெருங்கிவிட்டது. நீரும், உமது வழிசென்ற தோழர்களும், தோழிகளும் தமிழீழ நாட்டுக்கு விரைந்து வாருங்கள்!

உங்கள் வரவை எதிர்பார்க்கும்

அப்பா, அம்மா, அத்தார்மார், அண்ணர்,
அண்ணி, மருமக்கள், மக்கள்,
புங்குடுதீவு. ஆச்சி, உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(R; 1303)

## பெற்றுக் கொள்ளலாம்

(செ.த.மை.)

மட்டுவில் தெற்கு விழிப்புக் குழுவினரால் கடமையின் போது கண்டெடுக்கப்பட்ட சைக்கிள் ஒன்று, அப்பகுதி கிராமசேவையாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளைச் சமர்ப்பித்து சைக்கிளைப் பெற்றுக் கொள்ளலாம்.



## நினைவு கூருகின்றோம்

**1991 - 04 - 09**

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் புளியம்பொக்கணையில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரமரணமடைந்த

**கப்டன் பிரசன்னா** (அமரசேகரம் குணசேகரம் -திருநகர், கிளிநொச்சி)

இதே சம்பவத்தில் வீரமரணமடைந்த

**கப்டன் அருண்** (ஏரம்பு பாலச்சந்திரன் - புங்குடுதீவு)

இதே ஆண்டு பிரமந்தனாற்றில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**2ஆம் லெப். அன்பு** (யோகராசா நடேஸ்வரன் - உதயநகர், கிளிநொச்சி)

ஆகியோரை

இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

எழிலார்ந்த நம்மண்ணும்
ஏற்றமிகு நம் மொழியும்
ஒளி பெற்றுயர்ந் தோங்கும்
இது உறுதி...
இது உறுதி...
இணைந்திடுவோம்
உங்கள் வழியில்...
இனி உயிர்ப்பீர்
எம் உடலில்!

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2329)


அதி உன்னத சத்துணவு

# ஜீவாகாரம்

- வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
- கர்ப்ப தாய்மார்களுக்கும்
- பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- போஷாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
- ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு

★ இது முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உப உணவாகும் ★

கிடைக்குமிடம்: **அண்ணா கோப்பி கடை**

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(B- 2315)

# பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(முன்னைநாள் BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**கலை, வர்த்தகம்**

## பகல்நேர வகுப்பு

**A/L 91**
- முழுப் பாடத் திட்ட வகுப்பு
- மீட்டல் - வினா விடை வகுப்பு

ஆரம்பம்:- 10-4-91 புதன் 9.00 A.m

## சனி, ஞாயிறு வகுப்பு

**A/L 92** புதிய பிரிவு
ஆரம்பம்:- 13-4-91
சனி 8.00 A.m

**A/L 91** மீட்டல் வினா விடை வகுப்பு
ஆரம்பம்:- 13-4-91
சனி 12.00

- பொருளியல்:- திரு வரதராஜன்
- அளவையியல்:- திரு S. S. மனோகரன்
- கணக்கியல்:- திரு மரியதாஸ்
  திரு. செளந்தி
- வர்த்தகம்:- பிரபல விரிவுரையாளர்
- தமிழ்:- திருமதி மீரா
- இந்துநாகரிகம்:- திரு. ஜோதீஸ்வரன்

(B-2337)


# சமூக அரசியல் சிரத்தையுடன் வெளிவந்தது ஈழகேசரியே!

**பேரா. சிவத்தம்பி**

தமிழில் வரும் பத்திரிகைகள் ஏதோ ஒருவகையில் சமயப் பின்னணியுடன் தொடர்புடையவை என்ற மரபு ஏறத்தாழ தொண்ணூறு வருடம் போற்றப்பட்டு வந்த ஒரு சமூகச் சூழலில், ஈழகேசரி அந்த மதப்பண்பாட்டை ஏற்றுக் கொள்வதாய், ஆனால் அந்த மதப்பண்பாட்டை விளக்குவதே தனது பணி எனக் கொள்ளாமல் முற்றிலும் சமூக, அரசியற் சிரத்தை கொண்டதாய் வெளிவந்தது. யாழ்ப்பாணம் அரசியல் மயப்படுத்தப்படும் ஒரு சூழலில் வெளிவந்த ஈழகேசரியின் பிரதான தொடர்புகளை அரசியல், சமூக மாற்றம் பற்றியதாகும். இதனால் யாழ்ப்பாணத்தின் முதலாவது சமயச்சார்பற்ற பத்திரிகை என்று ஈழகேசரி சொல்லப்படத்தக்கதாயுள்ளது.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீடத் தலைவரும், தமிழ்ப் பேராசிரியருமான கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் ஒழுங்கு செய்த ஈழகேசரி நா. பொன்னையா நாற்பதாவது நினைவு தின விழாவில் நினைவுப்பேருரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். சபைத்தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்தும் அவர் பேசுகையில் கூறியதாவது:

சேர். பொன்னம்பலம் இராமநாதனையே தனது பிரதான முன்மாதிரியாகக் கொண்டதாகக் கூறிக்கொண்ட ஈழகேசரி அவரது சமூக நிலைப்பாடுகளை எதிர்த்து நின்ற வாலிபர் காங்கிரஸை ஆதரித்தது என்பது முக்கியமானதொரு விடயமாகும். சமாசனம் சமபோசனம் விடயத்திலும் தீண்டாமை விடயத்திலும் ஈழகேசரிப் பத்திராதிபர் திரு. நா. பொன்னையா காந்திய நிலைப்பாட்டையே எடுத்துக் கூறுகிறார்.


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 . 04 . 1963



உதிர்வு 21 . 03 . 1989

**ஸ்ரீகுமார் வல்லிபுரம்**

திகதி: 09 - 04 - 1991

கால நீரோட்டம் கருகி மறைந்தாலும் எம் இதயத்தில் ஏற்றி வைத்த அன்பெனும் சுடர் என்றும் ஒளி வீசியவாறிருக்கும். நீங்கள் மறைந்து, ஒருவருடம் ஆனாலும் எங்கள் இதயம் ஓயும்வரை எங்கள் அன்பே உங்கள் திருவுருவம் மறையாது. உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எங்கள் கண்ணீர் மலர்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

யாழ்ப்பாணம். அன்பு மனைவி, பிள்ளைகள்

(R-1316)



தியாக தீபம் அன்னை பூபதிக்கு

# தமிழீழ மக்கள் சார்பில் எமது இதய அஞ்சலிகள்

**ரவர் கூல்பார்**
இல: 324,
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**கைலாயபிள்ளை உதயகுமார்**
இல. 93
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவாஸ் ஸ்ரோர்ஸ்**
இல: 425
யாழ். இந்துக் கல்லூரி முன்பாக
கே.கே. எஸ். வீதி,
யாழ்நகர்.



**"அரன்ஸ்"**
இல: 100, அரசடி வீதி,
(இந்து மகளிர் கல்லூரிச் சந்தி)
யாழ்ப்பாணம்.

**சண்முகன்ஸ்**
இல 304, ஆலடிச்சந்தி,
பலாலி வீதி, கந்தர்மடம்.

**செல்வரத்தினம் ஸ்ரோர்ஸ்**
இல 48. இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.

**சசிகாந்தன்**
இல 193, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

பத்திரிகை விற்பனையில் முன்னணி ஸ்தாபனங்கள் (B-2343)

## சிந்தனைக்கு

செயல் பயனுள்ளதாக இருக்க, தெளிவாக வகுத்து ஏற்கப்பட்ட குறிக்கோள்களை நோக்கிச் செலுத்தப்படவேண்டும்.

— ஜவஹர்லால் நேரு

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்; 09.04.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# இராணுவத் தீர்வும் கடந்த இருவாரங்களும்

இருவாரங்களாக தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. கடந்த வருடம் ஜூன் மாதம் மீண்டும் ஆரம்பித்த மோதல் இவ்வருட ஆரம்பத்தில் சற்று ஓய்ந்து, தற்பொழுது மீண்டும் உக்கிரமடைந்துள்ளது.

மோதல் சம்பவங்கள் கிழக்கில் குமணவில் இருந்து வடக்கே பலாலி வரையும் இவ்வாரம் இடம்பெற்றுள்ளது. இம்மோதல்களில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதோடு பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. பதிலுக்கு சிறிலங்கா இராணுவமும் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டது. இதில் எதிர்பாராத இழப்புக்களையும் சந்தித்துள்ளது.

இதனால் இராணுவத்தினருக்கு தொடர்ந்துவரும் பாரிய இழப்புக்களை மூடி மறைக்கவும், இராணுவத்தினருக்குத் தெம்பூட்டுவதற்காகவும் தினசரி நூறு, இருநூறு புலிகள் கொல்லப்பட்டார்கள் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிடவேண்டியுள்ளது. மன்னார் மாவட்டம், வேப்பங்குளம் மோதலில் தனது 28 படை வீரர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாத நிலையில் இருந்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் விடுதலைப்புலிகள் தரப்பில் நூறுபேர் கொல்லப்பட்டார்கள் எனச் செய்தி வெளியிட்டது. இதில் இருந்து சிறிலங்காவின் நெருக்கடியையும் அதன் செய்தியில் உள்ள நம்பிக்கைத் தன்மையையும் புரிந்து கொள்ளலாம்.

கடந்த வாரம் ஏற்பட்ட மோதல் சம்பவங்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் இராணுவ ரீதியாக இனப்பிரச்சினைக்குத்தீர்வு என்ற நம்பிக்கையை பெருமளவில் சிதறடித்திருக்கும் என்பதில் ஐயமடையத்தேவை இல்லை. கிழக்கில் விடுதலைப்புலிகளை அழித்து விட்டோம், மிகுதி உள்ளவர்களைத் தேடி அழிக்கின்றோம் என்ற சிறிலங்கா இராணுவத்தினரின் மார்பு தட்டலுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 32ஆம் கட்டையிலும், அம்பாறை மாவட்டத்தில் 16ஆம் கொலனி மினிமுகாமையும், காவல் அரண்களையும் புலிகள் தேடிச் சென்று தாக்கியமையும் பெருத்த அடியாகவே அமைந்திருக்கும்.

அதாவது தமிழ்ப்பிரதேசம் எங்கும் விடுதலைப் புலிகள் தற்காத்துக் கொள்ளுதல் மட்டுமல்ல, தாக்கும் திறனையும் இழந்துவிடவில்லை என்பதை இதுஎடுத்துக் காட்டுவதாய் உள்ளது. அத்தோடு விடுதலைப்புலிகளின் பலம் தனித்துவமானது என்பதும், வெளியழுத்தங்களுக்கும் பெருமளவில் உள்ளாகக்கூடியது அல்ல என்பதும் தெரியவந்திருக்கும்.

இவ்வருட ஆரம்பத்தில் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையும், தமிழ் நாட்டில் தி. மு. கவின் ஆட்சிக் கவிழ்ப்பும் விடுதலைப் புலிகளைப் பெரிதும் பாதிக்கும் எனவும் இதனால் புலிகள் பலவீனமடைவார்கள் எனவும் எதிர்பார்த்தனர். இந்த எதிர்பார்ப்பு சிறிலங்கா அரச தரப்பில் மட்டும் ஏற்பட்டதல்ல, வெளிநாடுகள் தரப்பிலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தொடரும் மோதல்கள் நிலைமை அவ்வாறு இல்லை. விடுதலைப் புலிகள் தமது சொந்தக்காலில் நின்றே போராடுகின்றார்கள் என்பதைப் பலருக்குப் புரிய வைத்திருக்கும். அதாவது தமிழ் நாட்டில் இருந்து புலிகளும், இலங்கைத் தமிழ் மக்களும் தார்மீக ஆதரவை மட்டுமே எதிர்பார்க்கிறார்கள், வேறு எதையும் எதிர்பார்க்கவில்லை என்பதேயாகும்.

இந்நிலையில், சிறிலங்கா மட்டுமல்ல, இலங்கையின் இனப்பிரச்சினையில் ''அக்கறையுள்ள'' வெளிநாட்டுச் சக்திகளும் ஒன்றைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு அல்லது விடுதலைப் புலிகளைத் தவிர்த்து தீர்வு காணுதல் என்பதும் நடைமுறைச் சாத்தியப்பாடுகள் அற்ற விடயம் என்று உணர்ந்து கொள்ளுதல் நல்லது.

# ஈராக் தீர்மானத்தை ஏற்றது ஆக்கபூர்வமான செயல்

## ஜோர்ஜ் புஷ்

(வாஷிங்டன்)

ஐ நா பாதுகாப்புச் சபையின தீர்மானத்தை ஈராக் ஏற்றிருப்பது ஆக்கபூர்வமான ஒரு செயல் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஜோர்ஜ் புஷ் ஐ நா பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை ஈராக் ஏற்றுக்கொண்டது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இதனால் ஈராக்கின் தென்பகுதியில் இருந்தும் பாரசீகவளைகுடாவின் மற்றைய இடங்களில் இருந்தும் அமெரிக்கப்படைகள் விரைவில் வெளியேறத் தொடங்கும் எனக் குறிப்பிட்டார்.

இதேநேரம் வளைகுடாப் போர் முறைப்படி முடிந்து விட்டால் ஈராக்கின் உள்நாட்டுக் குழப்பங்களும் குறையும் என்றும் அதாவது குர்திஷ் மற்றும் பிறிஸ்சிக்காரர்களின் நெருக்கடிகளும் குறையும்என்றும் குறிப்பிட்டார்.

# ஈராக்-குவைத் எல்லைக்கு ஐ. நா. பாதுகாப்புப் படை

(நியூயோர்க்)

ஈராக் குவைத் எல்லையில் ரோந்து வேலையில் ஈடுபடவும், ஈராக்கில் இருந்து கூட்டுப்படைகள் வெளியேறுவதை கண்காணிக்கவும் ஐ.நா சபையின் படையினை அனுப்பி வைக்கவேண்டுமென ஐ.நா. சபை தலைமைச் செயலாளர் பெரஸ் டி கொய்யா யோசனை தெரிவித்துள்ளார்.

ஐ. நா. சபையின் படையினை அனுப்ப வேண்டும் என்ற யோசனையை ஐ நா. பாதுகாப்புச் சபை இன்று ஏற்றுக் கொள்ளும் என்றும் பெரஸ் டி கொய்யா தெரிவித்தார்.

இந்தப் படையில் 1,500 உறுப்பினர்களைச் சேர்க்க திட்டமிட்டிருப்பதாகவும், இதில் 300 பேரை முக்கிய அணியாக தேர்ந்தெடுத்து அவர்களை இராணுவ பார்வையாளராக அனுப்பவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பெரஸ்டி கொய்யா தெரிவித்தார். அத்துடன் இந்தப் படையினரின் செலவிற்கான அதிகளவு பணம் கொடுக்கு மாறு உறுப்புநாடுகளுக்கு அவர் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

# 3 ஆம் உலகிற்கு எதிராக ரஷ்யாவுடன் கூட்டு இல்லை

## லீ பெங்

(பீக்கிங்)

வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவுக்கும், சோவியத்யூனியனுக்கும் இடையே ஏற்பட்ட நல்லிணக்கம் உலகச் சமநிலையை சீர்குலைத்து விட்டது எனக் குறிப்பிட்டார் சீனப் பிரதமர் லீ பெங். கடந்த சனிக்கிழமை ஜப்பானிய தொலைக்காட்சி நிருபருக்கு பேட்டி அளிக்கையில் அவர் மேலும் சீனா எந்த வல்லரசுடனும் இணைந்து கொள்ளாமல் சுதந்திரமாக அதன் சமாதானக் கொள்கையை தொடர்ந்து பின்பற்றும் என்றும் சீனாவும் சோவியத் யூனியனும் அவற்றிற்கிடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொண்டால் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு எதிராக மாஸ்கோவுடன் சீனா கூட்டுச்சேர மாட்டாது என்றும் தெரிவித்தார். இதேவேளை சீனா சென்றுள்ள ஜப்பானிய வெளியுறவு அமைச்சருடன் பேசிய சீன வெளியுறவு அமைச்சர் மத்திய கிழக்கிற்கான ஆயுத விற்பனையில் சீனா கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் எனத் தெரிவித்திருக்கிறார்.

# வெற்றிடங்களுக்குப் புதிய நியமனம் இல்லை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் தங்கி இருக்கும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் இடத்தை நிரப்புவதற்கு பதிலாக எவரையும்சேர்த்து கொள்வதாக இல்லை என யாழ் பல்கலைக் கழக நிர்வாக மட்டத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் பற்றி மேலும் குறிப்பிடுகையில் கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக முப்பது வரையிலான விரிவுரையாளர்கள் கொழும்பில் தங்கி உள்ளனர். இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டாலும் அண்மைக்காலங்களில் பல்கலைக்கழகம் இயங்கிக் கொண்டிருந்தது போலவே இயங்கும் என குறிப்பிடப்பட்டது.

அதேவேளை கொழும்பில் நிற்கும் அதிகாரிகள் இராணுவ நடவடிக்கையை தாம் அங்கு தங்கியிருப்பதற்கு காரணமாக சொல்வார்களானால் இங்கு இப்பொழுது விரிவுரைகளைக் கவனித்து வரும் விரிவுரையாளர்களும் அதே இராணுவ நடவடிக்கைகளின் போதே கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்பது நாம் பதிலுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது.

(லோ)

# சமூகத்தின் விடுதலைக்காய் கல்வி பயன்பட வேண்டும்

## யோனி

(நமது நிருபர்)

மாணவர்கள் தமது கல்வியின் மூலம் எதிர் காலத்தை மட்டும் அமைப்பதை விடுத்து சமூகத்தின் எதிர்காலத்திற்காகவும், விடுதலைக்காகவும் பாடுபட்டு அக்கல்வியினைப் பயன் படுத்த வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி இழக்குப் பிரதேச நிர்வாகப்பொறுப்பாளர் நாகு யோனி 2ஆம் லெப். நிமாவின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டுபேசும்போது தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் இனவாத அரசின் அடக்குமுறைகளுக்கும், பொருளாதார தடைகளுக்கும் கல்வி தரப்படுத்தலுக்கும் எதிராக மாணவர்கள் ஒன்று திரண்டு தேசிய விடுதலைக்காக போரிட்டுக் கொண்டிருக்கும் தமிழ்ப் படைக்குப் பின்னால் அணிதிரண்டு எமது விடுதலையை வென்றெடுக்கவும், எமது இலக்கிற்கு தனியான படையை அமைக்கவும் அணிதிரளவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

2ஆம் லெப். நிமால் பற்றிக் குறிப்பிடுகையில், விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட வேங்கைகளில் நிமாலும் அடங்குவார்; அவர்மக்களை போராட்டத்துடன் இணைப்பதற்கு அரும் பணியாற்றிய மாவீரன் என்று குறிப்பிட்டார்.

தர்மபுர மாணவர் அமைப்பினால் நடத்தப்பட்ட இந்த நினைவஞ்சலிக்கூட்டம் கடந்த மாதம் 30ஆம் திகதி தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

## அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில்

# தொழிற் சீரமைப்பு ஏற்பட வேண்டும்

(டில்லி)

மேற்கத்தேச நாடுகளுக்கு எதிராக ஒன்றுபட்ட நிலையை மேற்கொள்ள ஆசிய, பசுபிக்பிராந்தியத்தின் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தொழில் சீரமைப்பு ஏற்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இவ்வாறு இந்தியாவின் இந்த வேண்டுகோள் அண்மையில் சோலில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய பொருளாதார சமூக நலன் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது என இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வெளிநாட்டு நோட்டுகளை கடத்திய சீக்கியர் கைது

(கொழும்பு)

சீக்கியர் ஒருவர் இலங்கையில் இருந்து வெளிநாட்டு நோட்டுக்களை சட்டவிரோதமான முறையில் எடுத்துச்செல்வதற்கு முற்பட்ட போது கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டார்.

இவர் இலங்கைக்கு வரும் போது 52 ஆயிரத்து 700 சிங்கப்பூர் டொலர்களையும், 15 ஆயிரம் ஈராக்கிய டினார்களையும் 716 அமெரிக்க டொலர்களையும் கொண்டு வந்தார். ஆனால் இவர் இலங்கையை விட்டு வெளியேறும் போது இந்தப் பூர்டொலர்களை அமெரிக்க டொலர்களாகவும் ஈராக்கிய டினார்களை சவூதி டினார்களாகவும் விமான நிலையத்தில் பிரகடனப்படுத்தியிருந்தார். இவரது போலியான பிரகடனத்தின் பிரகாரம் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார் எனவும் சுங்க விசாரணை பிரிவினர் தெரிவித்தனர்.

# குர்திஷ் அகதிகள் வருகையை ஈரானால் சமாளிக்க முடியாது

(தெகிரான்)

ஈராக்கில் இருந்து வெளியேறும் குர்திஷ் இனமக்களின் வருகையை சடுகொடுத்து சமாளிக்க முடியாது என ஈரான் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஈரானிய வானொலி தனது ஒலிபரப்பில் இதனை அறிவித்தது. ஐந்து லட்சத்திற்கும் அதிகமான அகதிகள் தமது நாட்டிற்குள் வந்துள்ளதாகவும் இனிமேலும் அவர்களின் வருகையை தம்மால் சடுகொடுக்க முடியாது என்றும் அந்த ஒலிபரப்பில் கூறப்பட்டது.

ஆனால் பல லட்சக்கணக்கான குர்திஷ் மக்கள் ஈரானுக்குள் நுழைவதற்காக அதன் எல்லையில் காத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை குர்திஷ் இன மக்களுக்கான அவசரகால உணவுப் பண்டங்களை ஈராக்கின் வடக்கு மலைப்பிரதேசங்களிலேயே விமானம் மூலம் போடுமாறு அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அமெரிக்க விமானங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரித்தானிய பிரதமர் ஜோன் மேஜர் 10 லட்சம் பவுண் தொகையினை உடனடி உதவிக்கு வழங்கியுள்ளார். அத்துடன் ஐ.நா. சபை அகதிகள் நிதியத்திலும் மேலும் 2கோடி பவுண் வைப்பில் இட்டுள்ளார்.

மீன்பிடிக்கச்

கட்டுமரமொன்றில் தான் மீன் பிடித்துக்கொண்டு நின்றதாகவும் அப்பொழுது ரோந்து சுற்றிக் கொண்டு வந்த கடற் படையினர் தன்னைக் கைது செய்து பீரங்கிப் படகுக்கு கொண்டு சென்று "நீ கொட்டியாவா?" என கடை ஆட்களை புலிகள் சுட்டுப்போட்டு வாடிகளை எம்மிடமே தருகிறது, நீங்கள் உழைத்து சந்தோஷமாக வாழுறது" என்று கேட்டு கடுமையாகத் தாக்கியதாகவும் தான் மயக்கமடையவே கடலுக்குள் தூக்கி வீசிவிட்டு அவர்கள் சென்றதாகவும் நற்தகுமார தெரிவித்தார். பின்னர் படுகாயங்களுடன் கடலில் நீந்தமுடியாது தத்தளித்துக்கொண்டு ஒருவாறு நங்கூரமிட்டிருந்த தனது படகில் ஏறி கரையை வந்து சேர்ந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காரைநகரில்

பீப்பாக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து கடற்படை முகாமிலிருந்தும், கடற்பகுதியில் இருந்தும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் மற்றும் கலிபர் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

அதேவேளை ஹெலிகொப்டர் ஒன்று இப் பகுதியில் பலமுறைவட்டமிட்டு நோட்டமிட்டதுடன், இடையிடையே கலிபர் தாக்குதல்களையும் நடாத்தியது. (ஃ)

ஒரு உயர்

மட்டக்களப்பில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும், வவுனியாவில் இராணுவ நிலைமீது புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் கூறினர்.

சுகாதார

அதிகாரிகளும் அடங்குவர். ஆனால் இந்த மூவருள் ஒரு வைத்திய அதிகாரி மீள் நியமனம் பெற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை திணைக்களத்துக்குச் சொந்தமான வடபிராந்திய வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவியதைத் தொடர்ந்து எட்டு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் நிலையங்களுக்கு மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறிய இளம் வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(லோ)

சம்பள விகித சத்தியக்கடதாசி

## தமிழ் மொழி பெயர்ப்பிற்காக கொழும்பு சென்றது

(நல்லூர்)

சம்பள விகிதத்தைச் சத்தியக் கடதாசி மூலம் சமர்ப்பிக்கக்கோரி யாழ். கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆங்கில மொழியிலான சத்தியக் கடதாசிப் படிவங்கள் தமிழ்மொழி பெயர்ப்பிற்காக கொழும்புக்கு யாழ். கல்விப்பணிப்பாளரால் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. கொழும்பிலிருந்து மொழிபெயர்ப்புப் பிரதி கிடைத்த பிறகுதான் இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் தமக்குரிய சம்பளத் கொடுப்பனவைப் பெறக்கூடியதாக இருக்கும்.

ஆங்கில மொழியில் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சத்தியக் கடதாசியை ஆசிரியர்கள் புறக்கணிக்க வேண்டுமென்றும், அதற்கான மொழிபெயர்ப்பைக் கல்வித் திணைக்களமே வழங்கவேண்டும் என்றும் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலர் கல்விப் பணிப்பாளரைக் கேட்டிருந்தது தெரிந்ததே. இதைத் தொடர்ந்தே படிவங்கள் மொழி பெயர்ப்பதற்காகக் கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

உள்ளூரிலேயே சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டு சத்தியக் கடதாசியைத் தமிழாக்கலாம் என்றும், தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கும் கல்வித் திணைக்களத்துக்கும் இடையிலான பலப்பரீட்சையில் இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் சிக்கியுள்ளதாக பாதிப்புக்குள்ளான ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

புலிகள

தெரியவில்லை. தற்போது புலுட்டை மானோடைப் பகுதியில் இந்த இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிஞ்சா

முனையில்

சிறிலங்கா இராணுவத்தினரும், புளொட் குழுவினரும் இணைந்து குறிஞ்சா முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலால் இராணுவ, புளொட் தரப்பில் பலத்தசேதம் மேற்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் இருபோராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 7 15 மணியளவில் வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் புளொட் குழுவும் இணைந்து குறிஞ்சா வேணிக்குச் சென்றுகொண்டிருந்தபோது இத்தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

மகிழவெட்டுவானில்

நேற்றுக் காலை வந்தாறுமூலை, கொறக்கொட்டாஞ்சேனை, செங்கலடி ஆகிய மூன்று இராணுவ முகாம்களில் இருந்து மகிழவெட்டுவானுக்கு இராணுவத்தினர் வந்தபோது மகிழவெட்டுவானில் உள்ள சந்தைமடு சுற்றாடலில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலால் பலத்த சேதம் ஏற்பட்டதாயினும் சிறிலங்கா இராணுவத்தினர் மகிழவெட்டுவான் பகுதியில் தற்பொழுது நிலைகொண்டுள்ளனர்.

வாகனேரியில்

நேற்று மாலை 4 மணியளவில் வாகனேரி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிக் காட்டுப்பகுதியினூடாகச் சிறிலங்கா இராணுவத்தினர் செல்ல முற்பட்டபோது காட்டுப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலால் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை. தற்போது இந்த இராணுவத்தினர் செங்கலை காட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ளனர்.

## இறுதிப்பரீட்சை

(நமது நிருபர்)

மூளாய்சாராக் கல்வித்தொழில்திறன் கல்வித்திட்டத்தின்கீழ் யாழ். மத்திய கல்லூரியிலும், வித்தியோதயத்திலும் கற்றுப்பயிற்சியெடுக்கும் கற்ற மாணவருக்கான இறுதிப் பரீட்சை நாளையும், நாளை மறுதினமும் அதே பாடசாலையில் நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் அதிபரைச் சந்தித்து அனுமதிஅட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## ஷெல்தாக்குதல்; கடை சேதம்

(செ. து. மை.)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் உக்கிரமாக எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அப்பகுதியிலுள்ள கடைஒன்று பலத்த சேதமடைந்தது.

பரீட்சை

செய்தி தெரிவித்தது.

பரீட்சை நடாத்துவதான முடிவை விடுதலைப் புலிகள் வரவேற்கும் அதேவேளை தம்மீது தாக்குதல்மேற்கொள்ளப்பட்டால் தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் மட்டும் மேற்கொள்ளப்படும் எனவும் லண்டனில் உள்ள புலிகள் வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

எமது

திரு. வே. பிரபாகரன் என்று பதில் எழுதியிருந்தார்கள். சில மாணவர்கள் திரு. ஆர். பிரேமதாசா என்று எழுதியிருந்தார்கள். இதனால் ஆசிரியர்கள் எது சரியானபதில் என்று தெரிவிப்பதில் சங்கடப்பட்டார்களாம். முடிவில் அந்தக் கேள்வியையே நீக்கிவிட்டார்களாம்.

## சிறிலங்கா - இந்திய செயலாளர்கள் பேச்சு

(புதுடில்லி)

சிறிலங்கா இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நேற்றுப் புதுடில்லியில் ஆரம்பமானது. இரு நாடுகளின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் மட்டத்தில் இந்த ஆண்டு இறுதியில் முதல் முறையாக நடைபெறவுள்ள கூட்டுக் குழுக் கூட்டத்துக்கான அணுகுமுறைகள் பற்றி இந்தக் கூட்டத்தொடரில் ஆராயப்படும். இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் முஸ்கின்துபே, இலங்கை வெளியுறவுத் துறைச் செயலாளர் பேர்னார்ட் திலகரெட்ணா ஆகியோர், இரு நாடுகளின் உத்தியோகபூர்வக் கூட்டத்துக்கு முன்பு சுமார் அரைமணி நேரம் தனிப்பட்ட முறையில் பேசினார்கள்.

## ஒவ்வொரு போராளி மரணமும் ஒரு வரலாறு

· மாலினி

(யாழ்ப்பாணம்)

களத்தில் மடியும் வீரன் ஒவ்வொருவனின் மரணமும் ஒரு வரலாறு, பூரணமான விடுதலைக்காகப் போராடிய இந்த மாவீரர்கள் இங்கே தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மனதில் எத்தனை ஆசைகள் இருந்திருக்கும்? இவர்களது பெற்றோர் அகதி முகாம்களிலோ காடுகளிலோ இருக்கலாம். அப்படியே அவர்களைச் சந்திப்பதற்காக ஒய்வு கொடுத்து இவர்களை அனுப்புவதானாலும் அதை ஈடுகொடுக்க, அந்த இடைவெளியை நிரப்ப எமமிடையே போராளிகள் இல்லை.

இவ்வாறு நேற்றுமுன்தினம் குப்பிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த போராளிகள் ஞானன், சுபன் ஆகியோரின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர்முன்னணியைச் சேர்ந்த செல்வி மாலினி அவர்கள் குறிப்பிட்டார்.

கொய்யாத்தோட்டம் சனசமூகநிலைய முன்றலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர். இறுதியில் போராளிகளின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

## முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியைப் பறிகொடுத்த யாழ் பல்கலைக் கழகப் பணியாளர் ஒருவருக்குப் புதிய துவிச்சக்கர வண்டி ஒன்றை சக ஊழியர்களும் மாணவர்களும் இணைந்து கொள்வனவு செய்து வழங்கி முன்மாதிரியாக நடந்துள்ளனர். (ஃ)

## சிறுவன் தற்கொலை!

சகோதரியுடன் வாக்குவாதப்பட்ட சிறுவனொருவன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துள்ளார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த கு. சுஜேந்திரன் (வயது 14) என்பவரே தற்கொலை செய்தவராவார். இவரது பெற்றோர் இடம் பெயர்ந்து ஆவரங்கால் புத்தூரில் தங்கி இருக்கின்றார்கள். நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. செ. து. மை.) (லோ)

செய்தியாளர்களுடன்

கூடாதென அனைத்து தொண்டர்கள், உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அண்மையில் தொண்டர்களை சந்தித்த புதிய நிர்வாகப்பிரிவு அதிகாரி ஒருவர் தொண்டர்கள் தொகையை மேலும் அதிகரிக்க தாம் எண்ணியுள்ளதாக தெரிவித்தார் எனவும் செஞ்சிலுவை சங்க வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டது. (லோ)

பம்பைமடு

வில் ஞாயிறன்று வெளியானது தெரிந்ததே.

வீரமரணமடைந்த போராளிகளின் பெயர் விபரம் வருமாறு:

கப்டன் ஜெயகாந்தன் (கு. மகேந்திரன், மல்லாவி), 2 ஆவது லெப். இயந்தன் (ரவிச்சந்திரன், சாலிதிரிகழாங்குளம் வவுனியா), இருபன் (சு. சைமன், பூவரசங்குளம், வவுனியா), தாமு (பொன்னையா ஜெயராசா, விளக்கு வைத்த குளம் வவுனியா), கபில்தேவ் (மு. சிவபாலன் சாலிதிரிக்கழாங்குளம், வவுனியா) தனேந்திரன் (எஸ். பன்னீர்ச்செல்வம் மாத்தளை) ஜீயாத் (ப. பரமேஸ்வரன் சோழிக்குளம், வவுனியா) முகுந்தன் (மு. சசிகுமார், உக்கியான் குளம் வவுனியா)

விமானக்

மீண்டும் காலை 7.30 மணியளவில் செம்மெட்டு என்னும் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் மேலுமிரு வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன,


## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி காராளசிங்கம்

திருமதி சரஸ்வதி காராளசிங்கம் காலமாகிவிட்டார். அன்னார் காராளசிங்கத்தின் அன்புமனைவியும், திருமதி சின்னத்தம்பி நல்லம்மாவின் மகளும், இளைப்பாறிய A. G. A. பாலரத்தினத்தின் அன்புச் சகோதரியும், மனோகரன், மஞ்சுளா, ரூபவதி, சுதாகரனின் அன்புத் தாயாரும், ஜெயச்சந்திரனின் அன்பு மாமியாருமாவார்.

ஈமக்கிரியைகள் (09 - 04 - 91) இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் நாவலடி ஒழுங்கை மானிப்பாயில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
காராளசிங்கம்

(R/1317)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 9 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது